# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
# District Munsif, Arni.
# O.S 95/2012

2026—ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness for PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தன் | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | வீரப்ப கவுண்டர் | வயது | : | 75 |
| கிராமம் | : | வடுகசாத்து | | : | |
| தாலுக்கா | : | ஆரணி | | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026.** **நேரம் - 11.20**

**சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினா் ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் உள்ள பிரதிவாதிகள் சோ்ந்து வாதியின் தந்தை மற்றும் குமாரி ஆகியோா் மீது அசல் வழக்கு எண்.82/1997 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. முனுசாமி மகன் ஆனந்தன் யாா் என்றால் சின்னராஜ் என்பவரின் அண்ணன் ஆவாா். நான் சொன்ன வா.சா.ஆ.1, 1992 ஆவணம் மேற்படி அசல் வழக்கு எண். 82/1997 வழக்கிற்கு

முன்பாக ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு 82/1997 என்ற வழக்கில் நான் சொல்கின்ற வா.சா.ஆ.1 ஆவணம் மற்றும் பாக கூர் சீட்டு உள் அடங்கிதான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி தீர்ப்பு பெற்று இவ்வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதி மோகனா இந்நீதிமன்றத்தில் சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. ஆகையால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் பக்கத்து நிலத்துக்காரர், எனக்கு விவரங்கள் தெரியும்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**

நேரம் - 11.30

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni